ॐ








## श्रीमद्-आद्य-शङ्कर-भगवत्पाद-परम्परागत-मूलाम्नाय-सर्वज्ञ-पीठम्
## श्री-काञ्ची-कामकोटि-पीठम्
## जगद्गुरु-श्री-शङ्कराचार्य-स्वामि-श्रीमठ-संस्थानम्

# मृत्युञ्जय-मानसिक-पूजा-स्तोत्रम्

### முகவுரை

பிறப்பும் இறப்பும் இயற்கையாக அமைந்துள்ள இந்த ஸம்ஸாரத்தில் தாழ்மையின்றி வாழ்ந்து சிரமமின்றி உடலை விட்டு பிரிய வேண்டும் என்ற ப்ரார்த்தனையே பகவானிடம் வைக்கப்படுகிறது. இவ்விரண்டுக்கும் ஸாதனம் பகவானிடத்தில் அசஞ்சல பக்தி ஆகும். அதையும் பகவான் தான் அளிக்க வேண்டும். இதுவே –

**अनायासेन मरणं विना दैन्येन जीवनम्।**
**देहि मे कृपया शम्भो त्वयि भक्तिमचञ्चलाम्॥**

என்று வேண்டப்படுகிறது. வாழும்போது வரும் இன்னல்கள் ம்ருத்யு என்பதாகவும் அகாலத்தில் உடலை விட்டு பிரிவது ம்ருத்யு என்பதாகவும் கொள்ளப்படும். ஸம்ஸார வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட இறைவனே இவ்விரண்டையும் ஜயிக்க நமக்கு அருளக்கூடியவர், ஆகவே ம்ருத்யுஞ்ஜயன் என்று அவரைப் போற்றுகிறோம். பகவானின் ஆனந்தமும் கருணையுமே அவரது ஶக்தியாக அம்பிகையாக தாயாக நமக்கு காட்சி அளிக்கிறாள்.

அவளுடன் கூடிய அவரை பூஜிப்பது இந்த ஸம்ஸார வாழ்க்கையில் ஸகல ஶ்ரேயஸ்ஸுகளுக்கும் ஒரே வழியாகும்.

பகவானை உடலால் பூஜிப்பதுடன் மனதால் பூஜிப்பது மிக அவசியம். மனது எங்கோ அலைந்துகொண்டிருந்தால் உடலால் பூஜிப்பதற்கு அத்துணை பயனில்லை. மனது பகவானிடத்தில் ஒருமுகப்பட்டால் உடலால் பூஜையே அந்தளவு முக்கியமில்லை (ஆனால் இது அந்தளவு எளிதானது அல்ல). ஆகவே மனதால் பகவானை த்யானித்து பூஜிப்பதற்கான வழியே மானஸ பூஜை எனப்படும்.

இந்த வழியைக் காட்டும்படி ஶ்ரீ ஶங்கர பகவத்பாதர் இயற்றிய ம்ருத்யுஞ்ஜய மாநஸ பூஜா ஸ்தோத்ரம் பக்தர்களின் அனுஸந்தானத்திற்காகவும் பக்தி அபிவ்ருத்தியை ப்ரார்த்தித்தும் வெளியிடப்படுகிறது.

**ஸ்தோத்ரத்தின் ஸாராம்ஶம்**

“பல ரத்னங்கள் பதிந்துள்ள கைலாஸ மலையில், கல்ப வ்ருக்ஷத்தின் அடியில் வீற்றிருப்பவரும், கற்பூரத்தையும் ஸ்படிகத்தையும் சந்திரனையும் ஒத்த அழகிய திருமேனி கொண்டவரும், அம்பிகையுடன் கூடியவரும், கங்கையின் உயரும் அலைகளால் அலங்கரிக்கப்பட்ட ஜடாபாரத்தை உடையவரும், கருணைக் கடலும், கழுத்தில் ஆதி ஶேஷனை அணிகலனாகக் கொண்டவருமான ஶ்ரீ ம்ருத்யுஞ்ஜயரை த்யானிக்கிறேன்.” என்று தொடங்குகிறது இந்த ஸ்தோத்ரம்.

ஶ்ரீ பகவத்பாதர் ஸாம்ப பரமேஸ்வரனை இவ்வாறு த்யானித்து ஆவாஹனம் செய்து, ஸிம்ஹாஸனம், பாத்யம், அர்க்யம், ஆசமனம், மதுபர்க்கம், பஞ்சாம்ருதம், ஸ்நானம் ஆகிய உபசாரங்களை மனதால் அளிக்கிறார். பிறகு பகவானின் ஜடாபாரத்தை உள்பட துடைத்துவிட்டு பல வித வஸ்த்ரங்கள், உபவீதம், சந்தனம், அக்ஷதை, புஷ்பம், பாதுகை, ஆபரணங்கள் ஆகியவற்றை ஸமர்ப்பிக்கிறார். கணேசரும் முருகனும் இரு புறமும் சாமரம் வீச, சத்ரம், பூர்ண கும்பம், முகக் கண்ணாடி, தீபம் ஆகியவற்றையும் அர்ப்பணிக்கிறார்.

அடுத்து பகவானின் நைவேத்யத்தை மிகச்சிறப்பாக வர்ணிக்கிறார். பூர்வ ஆபோஶநம் எடுத்துக்கொண்டு உயர்ந்த அன்னம், இனிப்பு பண்டங்கள், ஜீரகம் மிளகு முதலியவை சேர்ந்த காய்கறி, அப்பம், பருப்பு, சிறந்த நெய், சற்று

கசப்பு உடைய காய்கறி, இடையே பருக நீர், வாழைப்பழம் கலந்த பால்சாதம், பரமான்னம், பழங்கள், இளநீர், பானகம் ஆகியவற்றால் உலகனைத்திற்கும் இருப்பிடமான தனது விசாலமான வயிற்றை நிரப்பும்படி வேண்டுகிறார். கடுகு ஜீரகம் இந்துப்பு போன்றவை கலந்த துவர்ப்பு பதார்த்தங்களையும், ஏலக்காய் சுக்கு கலந்த அமுதம் போன்ற தயிர்சாதத்தையும், எலுமிச்சஞ்சாறு, மாங்காய்த் துண்டம் முதலிய புளிப்பு பதார்த்தங்களையும் உண்ணும்படி ப்ரார்த்திக்கிறார். இறுதியில் மோரையும் பருகும்படி பகவானை வேண்டுகிறார்.

உத்தர ஆபோஶநம் ஏற்ற பிறகு, கைகளைக் கழுவிக்கொண்டு மீண்டும் ஆசமனம் செய்து ஸ்வீகரிக்க தாம்பூலத்தை அர்ப்பணிக்கிறார். மணி ஒலியுடன் கற்பூர நீராஜனம் காட்டி, திருவடிகளில் மீண்டும் தீர்த்தம் விடுகிறார். பல வித பூக்களாலும் பில்வம் துளஸி ஆகியவற்றாலும் புஷ்பாஞ்ஜலி செய்கிறார். பக்தியுடன் மனதால் ப்ரதக்ஷிணம் செய்கிறார். ஒவ்வொரு அடி எடுத்து வைப்பதும் அனைத்து இருளையும் போக்கி அனைத்து மங்களத்தையும் அளிப்பதைக் கூறி “ம்ருத்யுஞ்ஜய, என்னை ரக்ஷி ரக்ஷி” என்று இறைஞ்சுகிறார்.

பல வித நாமங்கள் கூறி நமஸ்கரித்து “ஓ பார்வதீ மணாளனே, ஸம்ஸார தாபத்தில் அல்லலுறும் என்னை எப்பொழுதும் காப்பாய்” என்று ப்ரார்த்திக்கிறார். இறைவனுக்கு இளைப்பாற மென்மையான மெத்தை கொண்ட அழகிய கட்டிலை ஸமர்ப்பித்து அம்பிகை அவரது திருவடி சேவை செய்ய ஈசனார் சயனித்திருப்பதை த்யானிக்கிறார்.

ஹ்ருதய கமலத்திலும் வெளியிலும், காலையிலும் இரவிலும் நடுப்பகலிலும், இவ்வாறு 44 உபசாரங்கள் கொண்டு பகவானை பூஜிப்பவர்கள் அனேக அற்புதங்களின் இருப்பிடமான ஶ்ரீ ம்ருத்யுஞ்ஜயனின் திருவடியை அடைவார்கள் என்கிறார். சிவ லிங்கத்தை காலையில் தரிசிப்பதால் ஸ்வர்க்கமும், நடுப்பகலில் அஶ்வமேத பலனும், மாலையில் மோக்ஷமும் கிடைக்கும் என்றும், ப்ரதோஷ தினத்தன்று பஞ்சாக்ஷரம் சொல்லி பூஜிப்பது அந்த மூன்று பலன்களையும் ஒருங்க அளிப்பது என்றும் கூறுகிறார்.

- இவ்வாறு ஶ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகரான ஶ்ரீ கோவிந்த பகவத்பாதரின் சீடரான ஶ்ரீ ஶங்கர பகவத்பாதர் இயற்றிய ஶ்ரீ ம்ருத்யுஞ்ஜய மாநஸ பூஜா ஸ்தோத்ரம் (அதன் சாராம்ச மொழிபெயர்ப்பு) நிறைவடைந்தது

தொகுப்பு – வித்வான் ஸ்ரீரமண ஶர்மா, நெரூர் ஶங்கர மடம், ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்

कैलासे कमनीय-रत्न-खचिते कल्प-द्रु-मूले स्थितं
कर्पूर-स्फटिके·न्दु-सुन्दर-तनुं कात्यायनी-सेवितम्।
गङ्गा-तुङ्ग-तरङ्ग-रञ्जित-जटा-भारं कृपा-सागरं
कण्ठा·लङ्कृत-शेष-भूषण·ममुं मृत्युञ्जयं भावये॥ १॥

आगत्य मृत्युञ्जय चन्द्र-मौले
व्याघ्रा·जिना·लङ्कृत शूल-पाणे।
स्व-भक्त-संरक्षण-काम-धेनो
प्रसीद विश्वे·श्वर पार्वती·श॥ २॥

भास्व·न्मौक्तिक-तोरणे मरकत-स्तम्भा·युता·लङ्कृते
सौधे धूप-सुवासिते मणि-मये माणिक्य-दीपा·ञ्चिते।
ब्रह्मे·न्द्रा·मर-योगि-पुङ्गव-गणै·र्युक्ते च कल्प-द्रुमैः
श्री-मृत्युञ्जय सुस्थिरो भव विभो माणिक्य-सिंहासने॥ ३॥

मन्दार-मल्ली-करवीर-माधवी-
पुन्नाग-नीलो·त्पल-चम्पका·न्वितैः।
कर्पूर-पाटीर-सुवासितै·र्जलैः
आधत्स्व मृत्युञ्जय पाद्य·मुत्तमम्॥ ४॥

सुगन्ध-पुष्प-प्रकरैः सुवासितैः
विय·न्नदी-शीतल-वारिभिः शुभैः।
त्रि-लोक-नाथा·र्ति-हरा·र्घ्य·मादरात्
गृहाण मृत्युञ्जय सर्व-वन्दित॥ ५॥

हिमा·म्बु-वासितै·स्तोयैः शीतलै·रतिपावनैः।
मृत्युञ्जय महादेव शुद्धा·चमन·माचर॥ ६॥

गुड-दधि-सहितं मधु-प्रकीर्णं
सु-घृत-समन्वित-धेनु-दुग्ध-युक्तम्।
शुभ-कर मधु-पर्क·माहर त्वं
त्रि-नयन मृत्यु-हर त्रि-लोक-वन्द्य॥७॥

पञ्चा·स्त्र-शान्त पञ्चा·स्य पञ्च-पातक-संहर।
पञ्चा·मृत-स्नान·मिदं कुरु मृत्युञ्जय प्रभो॥८॥

जगत्-त्रयी-ख्यात समस्त-तीर्थ-
समाहृतैः कल्मष-हारिभि·श्च।
स्नानं सु-तोयैः समुदाचर त्वं
मृत्युञ्जया·नन्त-गुणा·भिराम॥९॥

आनीतेना·तिशुभ्रेण कौशेयेना·मर-द्रुमात्।
मार्जयामि जटा-भारं शिव मृत्युञ्जय प्रभो॥१०॥

नाना-हेम-विचित्राणि चीर-चीना·म्बराणि च।
विविधानि च दिव्यानि मृत्युञ्जय सु-धारय॥११॥

विशुद्ध-मुक्ता-फल-जाल-रम्यं
मनो·हरं काञ्चन-हेम-सूत्रम्।
यज्ञो·पवीतं परमं पवित्रम्
आधत्स्व मृत्युञ्जय भक्ति-गम्य॥१२॥

श्री-गन्धं घन-सार-कुङ्कुम-युतं कस्तूरिका-पूरितं
कालेयेन हिमा·म्बुना विरचितं मन्दार-संवासितम्।
दिव्यं देव-मनो·हरं मणि-मये पात्रे समारोपितं
सर्वा·ङ्गेषु विलेपयामि सततं मृत्युञ्जय श्री-विभो॥१३॥

अक्षतै·र्धवलै·र्दिव्यैः सम्यक्-तिल-समन्वितैः।
मृत्युञ्जय महा-देव पूजयामि वृष-ध्वज॥१४॥

चम्पक-पङ्कज-कुरवक-
कुन्दैः करवीर-मल्लिका-कुसुमैः।
विस्तारय निज-मकुटं
मृत्युञ्जय पुण्डरीक-नयना·प्त॥ १५॥

माणिक्य-पादुका-द्वन्द्वे मौनि-हृत्-पद्म-मन्दिरे।
पादौ सत्-पद्म-सदृशौ मृत्युञ्जय निवेशय॥ १६॥

माणिक्य-केयूर-किरीट-हारैः
काञ्ची-मणि-स्थापित-कुण्डलै·श्च।
मञ्जीर-मुख्या·भरणै·र्मनो·ज्ञैः
अङ्गानि मृत्युञ्जय भूषयामि॥ १७॥

गज-वदन-स्कन्द-धृते...
ना·तिस्वच्छेन चामर-युगेन।
गल·दलका·नन-पद्मं
मृत्युञ्जय भावयामि हृत्-पद्मे॥ १८॥

मुक्ता·तपत्रं शशि-कोटि-शुभ्रं
शुभ-प्रदं काञ्चन-दण्ड-युक्तम्।
माणिक्य-संस्थापित-हेम-कुम्भं
सुरे·श मृत्युञ्जय तेऽर्पयामि॥ १९॥

मणि-मुकुरे नि·ष्पटले
त्रि-जगद्-गाढा·न्धकार-सप्ता·श्वे।
कन्दर्प-कोटि-सदृशं
मृत्युञ्जय पश्य वदन·मात्मीयम्॥ २०॥

कर्पूर-चूर्णं कपिला·ज्य-पूतं
दास्यामि कालेय-समन्वितं च।
समुद्भवं पावन-गन्ध-धूपितं
मृत्युञ्जया·ङ्गं परिकल्पयामि॥ २१॥

वर्ति-त्रयो·पेत·मखण्ड-दीप्त्या
तमो·हरं बाह्य·मथा·न्तरं च।
सा·ज्यं समस्ता·मर-वर्ग-हृद्यं
सुरे·श मृत्युञ्जय वंश-दीपम्॥२२॥

राजा·न्नं मधुरा·न्वितं च मृदुलं माणिक्य-पात्रे स्थितं
हिङ्गू-जीरक-स·न्मरीचि-मिलितैः शाकै·रनेकैः शुभैः।
शाकं सम्य·गपूप-सूप-सहितं सद्यो·घृतेना·प्लुतं
श्री-मृत्युञ्जय पार्वती-प्रिय विभो सा·पो·शनं भुज्यताम्॥२३॥

कूश्माण्ड-वार्ताक-पटोलिकानां
फलानि रम्याणि च कार-वल्ल्याः।
सु-पाक-युक्तानि स-सौरभाणि
श्री-कण्ठ मृत्युञ्जय भक्षये·श॥२४॥

शीतलं मधुरं स्वच्छं पावनं वासितं लघु।
मध्ये स्वी-कुरु पानीयं शिव मृत्युञ्जय प्रभो॥२५॥

शर्करा-मिलितं स्निग्धं दुग्धा·न्नं गो-घृता·न्वितम्।
कदली-फल-सम्मिश्रं भुज्यतां मृत्यु-संहर॥२६॥

केवल·मति-माधुर्यं
दुग्धैः स्निग्धै·श्च शर्करा-मिलितैः।
एला-मरीच-मिलितं
मृत्युञ्जय देव भुङ्क्ष्व परमा·न्नम्॥२७॥

रम्भा-चूत-कपित्थ-कण्टक-फलै·र्द्राक्षा-रस-स्वादु-मत्-
खर्जूरै·र्मधुरे·क्षु-खण्ड-शकलैः स·न्नारिकेला·म्बुभिः।
कर्पूरेण सुवासितै·र्गुड-जलै·र्माधुर्य-युक्तै·र्विभो
श्री-मृत्युञ्जय पूरय त्रि-भुवना·धारं विशालो·दरम्॥२८॥

मनोज्ञ-रम्भा-वन-खण्ड-खण्डितान्
रुचि-प्रदान् सर्षप-जीरकां·श्च।
स-सौरभान् सैन्धव-सेवितां·श्च
गृहाण मृत्युञ्जय लोक-वन्द्य॥ २९॥

हिङ्गू-जीरक-सहितं
विमला·मलकं कपित्थ·मतिमधुरम्।
बिस-खण्डा·ल्ँलवण-युतान्
मृत्युञ्जय तेऽर्पयामि जग·दीश॥ ३०॥

एला-शुण्ठी-सहितं
द·ध्यन्नं चारु-हेम-पात्र-स्थम्।
अमृत-प्रतिनिधि·माढ्यं
मृत्युञ्जय भुज्यतां त्रि-लोकेश॥ ३१॥

जम्बीर-नीरा·ञ्चित-शृङ्गबेरं
मनोहरा·नम्ल-शलाटु-खण्डान्।
मृदू·पदंशान् सहसो·पभुङ्क्ष्व
मृत्युञ्जय श्री-करुणा-समुद्र॥ ३२॥

नागर-रामठ-युक्तं
सुललित-जम्बीर-नीर-सम्पूर्णम्।
मथितं सैन्धव-सहितं
पिब हर मृत्युञ्जय क्रतु-ध्वंसिन्॥ ३३॥

मन्दार-हेमा·म्बुज-गन्ध-युक्तैः
मन्दाकिनी-निर्मल-पुण्य-तोयैः।
गृहाण मृत्युञ्जय पूर्ण-काम
श्रीमत्-परा·पोशन·मभ्र-केश ॥ ३४॥

गगन-धुनी-विमल-जलैः
मृत्युञ्जय पद्मराग-पात्र-गतैः।
मृग-मद-चन्दन-पूर्णैः
प्रक्षालय चारु हस्त-पद-युग्मम्॥ ३५॥

पुन्नाग-मल्लिका-कुन्द-वासितै·र्जाह्नवी-जलैः।
मृत्युञ्जय महादेव पुन·राचमनं कुरु॥ ३६॥

मौक्तिक-चूर्ण-समेतैः
मृग-मद-घन-सार-वासितैः पूगैः।
पर्णैः स्वर्ण-समानैः
मृत्युञ्जय तेऽर्पयामि ताम्बूलम्॥ ३७॥

नीराजनं निर्मल-दीप्ति-मद्भिः
दीपा·ङ्कुरै·रुज्ज्वल·मुच्छ्रितै·श्च।
घण्टा-निनादेन समर्पयामि
मृत्युञ्जयाय त्रि-पुरा·न्तकाय॥ ३८॥

विरिञ्चि-मुख्या·मर-वृन्द-वन्दिते
सरोज-मत्स्या·ङ्कित-चक्र-चिह्निते।
ददामि मृत्युञ्जय पाद-पङ्कजे
फणी·न्द्र-भूषे पुन·रर्घ्य·मीश्वर॥ ३९॥

पुन्नाग-नीलो·त्पल-कुन्द-जाती-
मन्दार-मल्ली-करवीर-पङ्कजैः।
पुष्पा·ञ्जलिं बिल्व-दलै·स्तुलस्या
मृत्युञ्जया·ङ्घ्रौ विनिवेशयामि॥ ४०॥

पदे पदे सर्व-तमो·निकृन्तनं
पदे पदे सर्व-शुभ-प्रदायकम्।
प्रदक्षिणं भक्ति-युतेन चेतसा
करोमि मृत्युञ्जय रक्ष रक्ष माम्॥ ४१॥

नमो गौरी·शाय स्फटिक-धवला·ङ्गाय च नमो
नमो लोके·शाय स्तुत-विबुध-लोकाय च नमः।
नमः श्री-कण्ठाय क्षपित-पुर-दैत्याय च नमो
नमः फाला·क्षाय स्मर-मद-विनाशाय च नमः॥ ४२॥

संसारे जनि-ताप-रोग-सहिते ताप-त्रया·क्रन्दिते
नित्यं पुत्र-कलत्र-वित्त-विलसत्-पाशै·र्निबद्धं दृढम्।
गर्वा·न्धं बहु-पाप-वर्ग-सहितं कारुण्य-दृष्ट्या विभो
श्री-मृत्युञ्जय पार्वती-प्रिय सदा मां पाहि सर्वे·श्वर॥४३॥

सौधे रत्नमये नवो·त्पल-दला·कीर्णे च तल्पा·न्तरे
कौशेयेन मनो·हरेण धवलेना·च्छादिते सर्वशः।
कर्पूरा·ञ्चित-दीप-दीप्ति-मिलिते रम्यो·पधान-द्वये
पार्वत्याः कर-पद्म-लालित-पदं मृत्युञ्जयं भावये॥४४॥

चतु·श्चत्वारिंशद्-विलस·दुपचारै·रभिमतैः
मनःपद्मे भक्त्या बहि·रपि च पूजां शुभ-करीम्।
करोति प्र·त्यूषे निशि दिवस-मध्येऽपि च पुमान्
प्रयाति श्री-मृत्युञ्जय-पद·मनेका·द्भुत-पदम्॥४५॥

प्रात·र्लिङ्ग·मुमा-पते·रहरहः सन्दर्शनात् स्वर्ग-दं
मध्या·ह्ने हय-मेध-तुल्य-फल-दं सायन्तने मोक्ष-दम्।
भानो·रस्तमये प्रदोष-समये पञ्चा·क्षरा·राधनं
तत्-काल-त्रय-तुल्य·मिष्ट-फल-दं सद्योऽनवद्यं दृढम्॥४६॥

॥ इति श्रीमत्-परमहंस-परिव्राजकाचार्य-श्री-गोविन्द-भगवत्-पूज्यपाद-शिष्यस्य श्री-शङ्कर-भगवतः कृतौ मृत्युञ्जय-मानस-पूजा-स्तोत्रं सम्पूर्णम् ॥

❀❀❀